Registered as a Newspaper

வாடிக்கையாளரின் நன்மை கருதி இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
வி. ரி. அன் சன்ஸ்
பல் வைத்தியரும் கண் பரிசோதகரும்
317, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(B.M C.க்கு அருகாமையில்)
முகாமையாளர்: Dr. றெஜி சொலமன்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

Address being changed to the facilities of our customers.
V. T & Sons
QUALIFIED OPTICIANS and DENTIST
317, Clock Tower Road, JAFFNA.
(adjoining B M C.)
Manager: Dr. Regi Solaman.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ மாசி மீ 18 செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 ஜ ஆகிர் பிறை 11 (01 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 16

தடுப்பு முறைகளைப் பேண வேண்டுகோள்

# குடாநாட்டில் வாந்திபேதி வேகமாகப் பரவுகிறது

## இருபத்தாறு பேர்கள் இதுவரை பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாந்திபேதி (கொலரா) நோய் மிக வேகமாகப் பரவிவருகிறது. இதுவரை மொத்தம் இருபத்தாறு பேருக்கு வாந்திபேதி நோய் கண்டிருக்கிறது. ஒரே இடத்தில் என்று இல்லாது, நோயுள்ளோர் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். எனவே பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனவும், தடுப்பு முறைகளைச் சரிவரப் பேண வேண்டும் எனவும் சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் நேற்று நடந்த விசேட மாநாடு ஒன்றில் வாந்திபேதி பரவும் ஆபத்துக் குறித்து நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

நெடுந்தீவில் முதலில் பரவத் தொடங்கிய இந்நோய், குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் இப்போது பரவி விட்டது.

நெடுந்தீவில் வாந்திபேதியினால் மூன்று பேர் இறந்துள்ளனர்.

வேகமாகப் பரவிவரும் இந்த நோயைத் தடுப்பது சம்பந்தமாக நேற்றுக் காலை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை மாநாடு ஒன்றைக் கூட்டினார்.

இந்த மாநாட்டில் இந்திய அமைதிப்படையின் டாக்டர் சத்தியபாலன், வைத்திய அதிகாரிகள், மாநகரசபைப் பகுதி சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போது 26 பேர் வாந்திபேதியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

விவரம் வருமாறு:- நெடுந்தீவு-4, தெல்லிப்பழை-1, மானிப்பாய்-6, கோப்பாய் 3, சாவகச்சேரி-3.

யாழ். மாநகரப் பகுதியில், குருநகர்-2, கொன்வென்ற் வீதி 1, பாஷையூர்-1, திட்டி-5, கொழும்புத்துறை 1.

நேற்றைய மாநாட்டில் பின்வரும் அறிவுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டன.

* சுடவைத்து ஆறிய நீரைப் பருகுதல்.
* சமைத்தவுடன் உணவருந்துதல்.
* சமைத்த உணவை ஈக்கள் அசுத்தப்படுத்தாது பாதுகாத்தல்
* மலகூடத்தை சுத்தமாகப் பாவித்தல்.
* மலகூடமில்லாவிடில் குழி தோண்டி மலம் கழித்து பின்பு மூடிவிடல் வேண்டும்.
* வயிற்றோட்டம் குழந்தைகளுக்கேற்படின் தொடர்ந்து தாய்ப்பால் கொடுத்தல்,

பசுப்பால், மாப்பால் கொடுப்பதாயின் நீரைக் கூடச் சேர்த்துக் கொடுத்தல்.

* பிற இடங்களிலும் கடைகளிலும் உணவரு

(4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## அன்னையரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 1

போர் நிறுத்தம்செய்ய வேண்டும் என்று கோரி மட்டக்களப்பில் இரண்டு அன்னையர்கள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதம், நேற்றுப் பிற்பகல் 2 மணி அளவில் கைவிடப்பட்டதாக, இந்தியத் தூதரக வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் வாக்குறுதி எதுவும் அளிக்கப்பட்டதன பேரில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டதா அல்லது வேறு சூழ்நிலையில் கைவிடப்பட்டதா என்பது பற்றிய ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

இதேவேளை மட்டக்களப்பு அன்னையரின் உண்ணாவிரதம் இன்றும் தொடரும் பட்சத்தில், அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து—

இன்று குடாநாடு முழுவதும் அடையாள உண்ணாவிரதமும், பிரார்த்தனையும் நடத்துவது என யாழ். அன்னையர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாலை 4 மணியுடன் ஊரடங்கை நீக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு உத்தரவை அதிகாலை 4 மணியுடன் நீக்க வேண்டும்.

நேற்று யாழ் நகர அமைதிப்படை பொறுப்பதிகாரி பிரிகேடியர் காலோனைச் சந்தித்த பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவினரும், அன்னையர் முன்னணியினரும் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

மாணவர்கள் அதிகாலையில் ரியூசன் செல்வதற்கு வசதியாக 4 மணிக்கு ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தும்படி கோரிய அக் குழுவினர் மேலும் சோதனைச் சாவடிகளில் மக்கள் எதிர் நோக்கும் கஷ்டங்கள், அப்பாவிகள் கைது செய்யப்படுதல் போன்ற விடயங்கள் பற்றியும் எடுத்து உரைத்தனர்.

இவை அனைத்தையும் அவதானமாக விசாரித்தறிந்த நகரப் பொறுப்பதிகாரி இவ்விடயங்கள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

(இ-9)

யாழ் மாவட்டத்தில்

## ஜீ. சி. ஈ. பரீட்சையை விரைவில் நடத்த முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாண மாவட்டத்தில கடந்த டிசம்பரில் நடைபெறுக ஜீ.சி.ஈ (சாதாரண) தரப் பரீட்சையை விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைதிப் படையினரின் யாழ். பிராந்தியப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் காலோன் நேற்றுத் தம்மைச் சந்தித்த 11 பேர் கொண்ட குழுவினரிடம் இவ்வாறு கூறினார் என அறிய வந்தது.

பொறுப்பதிகாரியைச் சந்திப்பதற்காகச் சென்ற 11 பேர் கொண்ட குழுவில் சென்றிருந்த யாழ் - மாவட்டப் பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஒன்றியத்தின் தலைவர் திரு என் குகராஜாவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரிகேடியர் மேற்படி உறுதியை வழங்கினார் என அறியப்படுகிறது.

மேலும் க. பொ. த சாதாரண தரப் பரீட்சையை வெகு விரைவில் நடத்த தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் தான் மேற்கொண்டுள்ளதாகவும் மாணவர்கள் மனம் தளரல் பரீட்சைக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும்படியும் பிரிகேடியர் காலோன் கேட்டுக் கொண்டார். (ஒ-9)

### கடைசித் தினம்

மாநகரசபைத் தேர்தல்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இம்மாசம் ஏழாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்படி தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-எ)

## லொறி புரண்டு 12 பேர் மரணம்

லொறி ஒன்று தலைகுப்புறப் புரண்டதில் 12 பேர் மாண்டனர்.

வேலூரில் நடைபெற்ற அ.தி.மு.க.ஜெயலலிதா அணியின் கூட்டம் ஒன்றுக்குத் தொண்டர்களை ஏற்றிச் சென்ற லொறியே இப்படி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் 70 பேர் வரை காயமடைந்தனர். (ஒ-எ)

## யுத்த நிறுத்தச் செய்திக்கு மறுப்பு

புதுடில்லி மார்ச் 1

நாற்பத்தெட்டு மணிநேர யுத்த நிறுத்தக்கை இந்தியா அறிவித்திருக்கின்றது என்ற ஏஜென்சிச் செய்தி பொய்யானது.

இப்படி புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நிபந்தனையற்ற முறையில் சமாதானப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்தால் ஒழிய சமாதானப் பேச்சுகளுக்கு இடமே இல்லை.

இதையே பிரதமர் ராஜீவ் காந்தியும் நாடாளுமன்ற ஆலோசனைக்குழுவில வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இப்படி புதுடில்லி அதிகாரி சொன்னார்.

(இ எ)

## பத்திரிகை நிறுவனத்தில் குண்டு வெடிப்பு; இயந்திரம் கட்டடங்கள் சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணத்தில் உள்ள ''ஈழநாடு'' பத்திரிகை நிறுவனத்தில் நேற்றுக் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று நண்பகல் சுமார் 1-30 மணியளவில் பெரும்சத்தத்துடன் கேட்ட குண்டு வெடிப்பினால் பத்திரிகாலயத்தின் இயந்திரம் பலத்த சேதமடைந்ததாகச் சொல்லப்படுகிறது. கட்டடத்துக்கும் சேதங்கள் ஏற்பட்டன என்றும் அறிய வந்தது.

பத்திரிகைக் காரியாலயத்திற்குள் திடீர் என நுழைந்த இனந் தெரியாத சிலர், ஊழியர்களை வெளியே போகுமாறு பணித்ததாகவும், ஒரு சில நிமிடங்களில் குண்டு பெரும் சத்தத்துடன் வெடித்ததாகவும் சொல்லப்படுகிறது.

அங்கு குண்டு வெடித்தபோது, நகரின் பல இடங்களிலும உள்ள வீடுகள் அதிர்ந்ததாகப் பலரும் தெரிவித்தார்கள்.

விஷயம் அறிந்த இந்திய அமைதிப்படையினர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சமீபமாக உள்ள இடங்களைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். (அ)

### சுபநேரம்

01 03 1988
மாசி 18
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்: 10 58 முதல் 12 28 வரை
ராகுகாலம்: 3 28 முதல் 4 58 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பிரதோஷ விரதம்

மட்டக்களப்பில்

### ஊரடங்கு தளர்வு

கொழும்பு, மார்ச் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் இன்று (செவ்வாய்) காலை 6-00 மணிக்கு தளர்த்தப்படும்.

மீண்டும் இன்று மாலை 6-30 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்—

இப்படிக் கொழும்பில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் நேற்று இரவு அறிவித்தது. (ஒ-எ)

## மேலும் 25,000 அமைதிப் படையினர் இலங்கை வருவர்

புதுடில்லி, மார்ச் 1

இலங்கைக்கு மேலும் இருபத்தையாயிரம் இந்திய அமைதிப்படை வீரர்கள் ஏப்ரல் மாத முடிவுக்குள் அனுப்பி வைக்கப்படுவர்.

இப்படி புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் தற்போது உள்ள இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டி விட்டது என்றும் அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அமைதிப் படையில் இந்தியாவின் இராணுவம், கடற்படை, விமானப்படை, கரையோரக் காவற்படை, மத்திய ரிசர்வ் பொலீஸ் படை, இந்திய - திபெத் எல்லைப்படை, ரயில்வே பாதுகாப்புப்படை, தேசியப் பாதுகாப்புக் காவலர்கள் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்கள் பணி புரிகின்றனர்.

இதனிடையில இந்திய இராணுவத்தில் மேலும் 40 ஆயிரம் பேர் புதிதாகச் சேர்க்கப்படவுள்ளனர்.

ஒரு வருடப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படும். (ஒ-எ)

## மாவட்ட கூட்டுப் படைத் தளபதி

கொழும்பு, மார்ச் 1

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் கூட்டுப்படைத் தளபதியாக பிரிகேடியர் தயா விஜேசேகரா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அம்பாறையில் இருந்து இயங்க இருக்கும் பிரிகேடியர் தயா விஜேசேகரா, ''இலங்கை அரசுப் படையினரின் நடவடிக்கைகளையும் இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதே எனது கடமை''- என்று சொன்னார். (ஒ-எ)

முச்சந்தி முரளி



முந்தின காலத்திலை கொள்ளை, பிடுவன் என்டு நோயள் வந்து தானே சனங்கள் கஷ்டப்பட்டது. அதனாலை கொலராப் பற்றி மிகவும் கவனமாக இருக்க வேணும் பாருங்கோ...!

## புலிகள் கிழக்கைக் கைவிடுவர் என்பதை நம்ப முடியவில்லை

### சிவஞானம் சொல்கிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கிழக்கு மாகாணத்தை விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் கைவிட்டு விடுவார்கள் என்றோ அல்லது அப்படி ஒரு திட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றோ என்னால் நம்பவே முடியவில்லை

இவ்வாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நேற்று உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கிழக்கை கைவிட்டுவட மாகாணத்தில் தேர்தல் இன்றி இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது பற்றி, இலங்கை அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்திவருவதாகத் தாம் அறிவதாக, இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸிற் வெளியிட்ட தகவல் குறித்து வினவிய போதே திரு. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு எந்த நிலையில் உள்ளது? என்று கேட்டதற்குத் திரு. சிவஞானம் தெரிவித்ததாவது:-

பேச்சுவார்த்தை இந்தியாவிலேயே நடத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நிலையை இந்திய அதிகாரிகளுக்கு நான் தெளிவுபடத் தெரியப்படுத்தியுள்ளேன்-

விடுதலைப்புலிகளின் பொர்சில், இலங்கை இந்திய அரசுகள் ஒத்துக் கொண்டதன் பேரில் முன்னர் அறிவிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்துக்கு நான் பிரதம நிர்வாகியாக நியமிக்கப்பட்டேன்-

எனினும் கிழக்கு மாகாணத்துக்குபோதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தினாலேயே விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வகத்தில் அதிருப்தி தெரிவித்தனர்-

அதன் அடிப்படையிலேயே நானும் அந்த நியமனத்தைப் பொறுப்பேற்க முடியாது எனத் தெரிவிக்க வேண்டிய

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயங்களுக்கும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரம்**

**கல்வி**

க. பொ. த (உ.த) தூயகணிதம் பிரயோக கணிதம் ஆரம்பமாகின்றது. கிழமை நாட்கள், ஞாயிறு காலை, மாலை வகுப்புகள் 1988, 1989 பரீட்சைப் பிரிவுகளுக்கான அட்சர கணிதம், நிலையியல் ஆரம்பமாகின்றது பிரபல கல்லூரி ஆசிரியரும் பேராதனை பல்கலைக்கழக முன்னாள் கணித விரிவுரையாளருமான போதனை செய்வார் இடம்: Shamrock Academy. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (1776)

**ரேனியோ**

கிளின்-கட் உங்களை என்றும் வரவேற்கின்றது. ரேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம்: கிளின்-கட் இல:- 239. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**கம்பியூட்டர் கல்வி**

பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பிரத்தியேக சம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன ஆரம்பம்: 7 - 03 - 88 Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உபதபால் கந்தோர் அருகாமை)

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் பயிற்சி (Basic) பயிற்சி காலம் 40 நாள் கட்டணம்; 750/- மாத்திரம் ஆரம்பம்: 7-3-88. O/L படித்த இருபாலாரும் சேரலாம் சான்றிதழ் வழங்கப்படும் Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2 ஆவது ஒழுங்கை யாழ்ப்பாணம் (உபதபால் கந்தோர் அருகாமை.)


# மீனவர்களுக்குப் புதிய நடைமுறைகள்

## அமைதிப்படை அறிவிப்பு

காங்கேசன்துறை மார்ச் 1

காங்கேசன்துறை முதல் பருத்தித்துறை வரை மீன்பிடித்தொழில் செய்வதற்குப் புதிய நடைமுறைகள், நிர்ந்தனை இந்திய அமைதிப் படை அறிவித்துள்ளது.

பலாலியில் உள்ள இந்திய அமைதிகாக்கும் படையின் தலைமைக்காரியாலய சிவில் நிர்வாகப் பிரிவு இதுகுறித்து நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

புதிய நடைமுறைகளின்படி மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளுமாறும் அவற்றை மீறுவோரின் மீன்பிடிக் கலங்கள் பறிமுதல் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறைகளின் விவரம் வருமாறு:-

★ காங்கேசன்துறை முதல் பருத்தித்துறை வரை இரவு மீன்பிடித்தலுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வள்ளங்கள் மட்டுமன்றி கட்டுமரங்களிலும் சென்று தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது

★ அந்தந்தப் பகுதி மீனவர்கள் அருகிலுள்ள அமைதிப் படை முகாமில் மாலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் தொழிலுக்குச் செல்ல வேண்டும். மறுநாள் காலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் கரை திரும்பி அதே முகாமில் சென்று அனுமதிப்பத்திரங்களை சமர்ப்பித்து பதிவு செய்ய வேண்டும். எங்கிருந்து புறப்பட்டதோ அவ்விடத்திற்கே திரும்பி வர வேண்டும்.

★ வள்ளங்கள் தனியாகச் செல்லாமல் சேர்ந்துசெல்லவேண்டும்.

★ வள்ளங்கள் 5 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் ஓடக்கூடாது. 10 கிலோ மீட்டர் தூரம்வரை கடலில் சென்று தொழில்செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் எக்காரணம்கொண்டும் செல்லக்கூடாது.

★ மீன்பிடிக் கலங்களில் எந்நேரமும் வெளிச்சம் ஒன்று எரிந்து கொண்டிருக்க வேண்டும். பதிவு இலக்கம் தெளிவாகத் தெரியும் வண்ணம் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

வள்ளங்களில் வெள்ளைக்கொடி ஒன்றும் ஏற்றப்பட்டிருக்கவேண்டும்.

(இ-68)

### 60,000 ரூபா பிணையில் விடுவிப்பு

கொழும்பு. மார்ச் 1

கொள்ளை வழக்கு ஒன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட செல்வராஜ் ஆனந்தன் என்பவர் அறுபதினாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அடையாளம் கண்டு தண்டனை விதிப்பதை கொழும்பு மேலதிக நீதிவான் இந்த மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்,

கொழும்பு ஹொங்கொங் அன்ட் ஷாங்காய் வங்கி முன்னால் வைத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கே. ஏ. கந்தசாமியிடமிருந்து 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவைக் கொள்ளை அடித்தார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது

இன்னொரு எதிரியான யூசுப் சகாப்தீன் விடுதலை செய்யப்பட்டார். (ஒ-எ)

# அஹிம்சை, ஜனநாயகம் இன்றி மனித நாகரிகம் நிலைக்காது

## ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 1

அகிம்சை, அமைதி, ஜனநாயகம் ஆகியன இன்றி மனித நாகரிகம் நீண்டநாளைக்கு நிலைத்து இருக்கமுடியாது

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இப்படிச் சொன்னார்.

அம்பாறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சமாதன விகாரை ஒன்றை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் சொன்னதாவது;

அகிம்சைமீது எம்மில் சிலர் நம்பிக்கை வைப்பதாக இல்லை அவர்களின் நடவடிக்கைகள் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. தலைவர்களை ஒழித்துக்கட்டி அதிகாரத்தைக் கைப்பற்ற அவர்கள் முயற்சிக்கின்றனர்.

அகிம்சை வழியை அவர்கள் ஏற்கும்வரை அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது.

பயங்கரவாத நடவடிக்கைகள் வடக்கு, தெற்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதில் இந்திய அமைதிப்படை பல தியாகங்களைச் செய்துள்ளது. இந்திய வீரர்கள் 400 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஏராளமான பணத்தை இந்தியா எமது நாட்டில் அமைதியை ஏற்படுத்தச் செலவு செய்துவருகின்றது

இப்படி ஜனாதிபதி சொன்னார்.

(ஒ-எ)

## பட்டப்பகலில் திருட முயற்சி

# பொதுமக்கள் துரத்திப் பிடித்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

பட்டப்பகலில் வீடு புகுந்து திருட வந்த இருவர் பிடிக்கப்பட்டனர். பொதுமக்கள் துரத்திப் பிடித்து அமைதிப் படையிடம் இவர்களை ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நல்லூர் செட்டித் தெருவிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

இதுபற்றி மேலும் அறிய வருவதாவது;

கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 2 மணி அளவில்மேற்குறிப்பிட்ட வீட்டுக்காரர்கள் வீட்டினுள்ளே இருந்தபோது வாசல்வழியாக நுழைந்த ஒருவர் வீட்டு வரு[ந்]தையில் இருந்த டிரான்சிஸ்டர் ரேடியோவை எடுத்துச் சென்று வாசலில் நின்ற இன்னொருவரிடம் கொடுத்து அனுப்பிவிட்டு திரும்பி வந்தார்.

திரும்பி வந்து மின்விசிறி ஒன்றையும் தூக்கிச் செல்ல எத்தனித்தபோது வீட்டுக்காரர் இதை அவதானித்து விட்டார்.

இதனை அடுத்து வீட்டுக்காரர் 'கள்வன், கள்வன்' எனக் கத்தியபோது களவாட வந்தவர் மின்விசிறியை நிலத்தில் போட்டுவிட்டு ஓட ஆரம்பித்தார்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் திரண்டு அவரைத் துரத்திச் சென்று பிடித்து வந்து நல்லூர் குறுக்கு வீதியில் முகாமிட்டுள்ள இந்தியப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

அம்முகாமின் பொறுப்பதிகாரி மேஜர் எடுத்துக்கொண்ட முயற்சியால் மற்றைய நபரும் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்த டிரான்சிஸ்டர் றேடியோவும் மீட்கப்பட்டது. (இ-9)


**WANTED MANAGER**

Vacancy exists for the post of Branch Manager in a reputed Financial Institution at Kilinochchi - Salary Rs. 2 000/- plus other benefits. Accommodation to reside with family will be provided. Preference will be given to Ex-Bank Officers and residents of the area.

Those eligible are required to forward their applications together with their Bio data to:

ADVERTISER,
207, Power House Road,
JAFFNA.


## ஓய்வூதியர்களுக்கு

# அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் நிலுவையுடன் ஏப்ரல் மாதம் கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 1

அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை அரசுப்பென்ஷனியர்கள் ஏப்ரல் மாதத்தில் இருந்து பெறுவர்.

ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் ஏப்ரல் மாத ஓய்வூதியத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும்.

இத்தகவலை பொது நிர்வாகத்துறை அமைச்சுச் செயலாளர் திரு. டி. பி. பி. எல். சி வர்த்தனா தெரிவித்தார்.

ஓய்வூதிய அதிகரிப்பு சம்பந்தமான சிபார்சு தற்போது ஜனாதிபதியின் பரிசிலனையில் உள்ளது.

இவ்வாரம் நடைபெறவிருக்கும் அமைச்சர்கள் கூட்டத்தில் இதுசம்பந்தமாக முடிவு எடுக்கப்படும்

ஓய்வூதிய அதிகரிப்பு கணிசமான அளவு இருக்கலாம் என்று பென்ஷன் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ)

## தமிழகம் செல்லும் கலைஞர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

சித்தன்கேணி 'யப்னீஸ்' இசைக்குழுவின் ஸ்தாபகரும், பாடகரும் கவிஞருமான மகேஸ்வரன் அடுத்த மாதநடுப்பகுதியில் தமிழகம் செல்லவுள்ளார்.

அவர் அங்கு கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதுடன் யாழ். குருநகரில் எம். ஜி. ஆரின் சிலை திறப்புவிழாவில் இயற்றிப்பாடிய 'எங்கள் எம். ஜி. ஆரை' என்ற பாடலையும் ஒரு திரைப் படத்திற்காகப் பாடவுள்ளார்

இவர் எழுதிய "இன்னிசைத் தென்றல்" என்ற நூல் கடந்த வருடம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-9)

## அஞ்சலி!

யாழ்ப்பாணம், மார்ச் 1

பாலர் கல்விக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் காலஞ்சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விப் புலத்தலைவர் ப. சந்திரசேகரத்துக்கும் மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் வே[...] [illegible] அஞ்சலி செலுத்தப்பட்டது.

(இ)





# ★ ஷப்ரு ★

யூனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

# நிலையான முதலீட்டுத்திட்டம்

★ குறைந்த வைப்புத் தொகை 1000/-

★ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-

★ பணமாக ★ காசோலையாக ★ வங்கிக் கணக்கூடாக

## நிதிக் கூற்று

| | 1984/85 ரூபா | 1985/86 ரூபா | 1986/87 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,383,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970 366 | 100 577,492 |
| வங்கிக்கடன்கள் | 1.791,516 | 8,283,816 | 7,718.284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,897 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்துமுன் லாபம் | 5 783 720 | 9 878,026 | 19 310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827 514 | 8.505,201 | 16,880.875 |
| வரி செலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356 206 | 1,372,825 | 2.330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | — | — | — |

**இயக்குநர் சபை**

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon) ★ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)

★ வீ. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி) ★ ஆர். பாலசுப்பிரமணியம்.

★ ஓ. சி. எம் ஹசன்பாரி, B.A.

மேலும தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

# ஷப்ரு நிதி நிறுவனம்

61. நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர்.-
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இதயத்தில் ஈசனைக் காணாதவன் வேறு எங்கேயும் காணமாட்டான்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்


**உதயன்**

உண்மை - நிர்ப்பயம் - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24205 22073

01.3.1988 த.பெ.இல:-23


## ஈழமும் ஐ. தே. க.வும்

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவர் திரு ரஞ்சன் விஜயரத்தின ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் எப்போது தமக்கு ஈழம் தேவை என்று கேட்டார்கள்? — இதுவே அவர் எழுப்பியிருக்கும் கேள்வி.

அந்தக் கேள்வியில் இருந்து, "தமிழர்கள் ஈழம் கோருவதற்குக் காரணமாக இருந்தது என்ன?" என்ற உப கேள்வியும் பிறக்கிறது.

கேள்வியைக் கேட்டுப் பதிலைச் சொன்ன திரு. விஜேரத்தின, தமிழர்கள் ஈழம் கேட்டதற்கு முழுக்காரணமும் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும், அவரது தனிச்சிங்களச் சட்டமும் தான் என்று சொல்லியிருக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்குப் பிரதான காரணமாக இருந்தவர் எஸ். டபிள்யு. ஆர். டி. என்பதையும், அடிப்படைக் காரணமாக இருந்தது தனிச்சிங்களச் சட்டம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் சிங்களம் ஆட்சி மொழியாக வேண்டும் என்று முதலில் ஆலோசனை கூறியவர் இப்போதைய ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன என்பதைச் சரித்திரம் மறந்து விடாது. அந்த ஆலோசனையை, தாம் பதவிக்கு வருவதற்காகச் செயலாக்க முனைந்தவர் — செயலாக்கியவர் பண்டாரநாயக்கா.

எனவே தமிழர் பிரச்சினை தோன்றுவதற்கான முழுப்பழியையும் பண்டாரநாயக்கா மீதும் அவரது கட்சி மீதும் மட்டும் சுமத்த முடியாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிங்களப் பேரினவாதத்தின் தலைப்புள்ளியாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்காவுக்கும், அவரைச் சார்ந்து நின்ற திரு. ஜே. ஆருக்கும் மொத்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இதில் பெரும் பங்குண்டு.

தனிச் சிங்களச் சட்டத்தால் தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யும் பொருட்டு பிரதேச சபைகளை நிறுவுவதற்காக திரு பண்டாரநாயக்கா செய்த ஒப்பந்தத்தை எதிர்த்து அதனைக் கிழித்தெறிய வைத்தவரும் இப்போதைய ஜனாதிபதியே.

ஏன்? இப்போதும் கூட, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கையும் கிழக்கையும் அவர்களின் தாயகமாக அங்கீகரித்து ஒன்றாக நிர்வகிக்க இணங்காமல் பின்னடிக்கிறார் ஜனாதிபதி! வடக்கு- கிழக்கு இணைப்பை எதிர்க்கிறார்!

அப்படியிருக்க, தமிழர் பிரச்சினைக்கான முழுப் பழியையும் பாவத்தையும் சுதந்திரக் கட்சி மீது சுமத்துவதற்கு, ஐ தே. கட்சித் தலைவர் முயல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

தமிழர்களைப் பொறுத்த வரையில், அவர்களது உரிமைகளைப் பறித்து அடிமைகளாக்க முயன்ற — முயலும் அநியாயத்தில் தென்னிலங்கையின் எல்லா அரசியல் கட்சிகளுக்கும், அவற்றின் தலைவர்களுக்கும் பங்கு உண்டு என்பதேயாகும். இடதுசாரிக் கட்சிகள் கூட, தமது அரசியல் லாபம் கருதி தமிழர்களின் நலன்களைப் புறக்கணிக்கப் புறப்பட்ட சரித்திரமும் உண்டு.

தமிழர்களின் இப்போதைய நிலைக்குச் சிங்களத் தலைவர்கள் மட்டும்தான் காரணம் என்று கூறுவது முற்றாகப் பொருந்தாது. தமிழ்த் தலைவர்களுக்கும் இதில் பெரும் பங்கு உண்டு.

உரிமைகளைப்பெறும் விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையாக, மக்கள் நலனை மனதில் வைத்துச் செயலாற்றியதாக இல்லை.

ஒருவரை வீழ்த்தி மற்றவர் மேலே வர வேண்டும், செல்வாக்கும், புகழும் தேடவேண்டும் என்ற போட்டியான - பொறாமையான போக்கு ஆரம்பத்திலிருந்தே தமிழர் அரசியலில் காலூன்றியது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு — என்பது ஒருபோதும் பொய்க்காது.



**பொய்யாமொழி**

**குறள்:**

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

**பொருள்:**

ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும்; மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கி விடுவதாகும்.

# தமிழக சட்டசபை தேர்தலுடன் நாடாளுமன்றத் தேர்தலும்

## எதிர்வரும் டிசம்பரில்?

### புதுடில்லி ஆலோசனை

புதுடில்லி, பெப் 29

தமிழக சட்டசபைத் தேர்தலுடன் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலையும் நடத்த பிரதமர் ராஜீவ் காந்தி முடிவு செய்திருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு டிசம்பரில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தல் கடைசியாக 1984 டிசம்பரில் நடந்தது.

அதன்படி மீண்டும் 1989 டிசம்பரில் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

ஆனால் ஒரு ஆண்டுக்கு முன்னதாக இந்த ஆண்டு டிசம்பரில் திடீர்த் தேர்தல் நடத்தப் பிரதமர் ராஜீவ் முடிவு செய்திருக்கின்றார்.

சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று இருப்பதால் அது தனக்குச் சாதகமாக இருக்கும் என்று அவர் நம்புகின்றார்.

தேர்தல் நடந்தால் மக்கள் யாரை ஆதரிப்பார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு நவீன ஆராய்ச்சி நிறுவனத்திடம் உதவியைநாடி அதற்கான ஏற்பாடுகளை செய்து இருப்பதாகவும் புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்துடன் தமிழக சட்டசபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று தெரிகிறது. (எ)

### மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் நகரம்!

ஜெனீவா, பெப் 29

உலகிலேயே மக்கள் தொகை அதிகமாக உள்ள நகரம் மெக்சிகோ தான். அங்கு 2 கோடியே 60 லட்சம் மக்கள் வசிக்கின்றார்கள். மக்கள் தொகை பெருக்கம் மிகுந்த மற்ற நகரங்கள் வருமாறு:-

டோக்கியோ (1 கோடியே 70 லட்சம்) கல்கத்தா (1 கோடியே 60 லட்சம்) நியூயார்க் (1 கோடியே 50 லட்சம்) கெய்ரோ (1 கோடியே 30 லட்சம் கராச்சி (1 கோடியே 20 லட்சம்) லாஸ் ஏஞ்சல்ஸ் (1 கோடியே 10 லட்சம்)

இந்த நூற்றாண்டு முடிவில் 9 நகரங்கள் தலா ஒன்றரைக் கோடி ஜனத் தொகையைத் தாண்டி விடும் என்று சர்வதேச தொழிலாளர் நல நிறுவனம் கூறுகிறது.

**வெளி உலகில்**

## தென் ஆபிரிக்கா, இஸ்ரவேல் அடக்குமுறைச் செயல்களுக்கு ஆபிரிக்க நாடுகள் கண்டனம்

அடிஸ்அபாபா, பெப் 29

தென்ஆபிரிக்கா, இஸ்ரவேல் நாடுகளின் அடக்குமுறைச் செயல்களை ஆபிரிக்க நாடுகள் வன்மையாகக் கண்டித்தன.

எதியோப்பியத் தலைநகரான அடிஸ்அபாபாவில் சனிக்கிழமை முடிவடைந்த ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளுக்கு உள்ள 200 கோடிடாலர் வெளிநாட்டுக் கடன்கள் பற்றி முடிவுசெய்ய சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என்றும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (எ)

### பதில் நடவடிக்கை

ஈரானில் இருந்து வரும் ஹஜ்யாத்ரீசர்களை மெக்காவுக்குள் பிரவேசிக்க சவூதிஅரேபியா அனுமதிக்க மறுத்தால் பதில் நடவடிக்கையை எதிர்பார்க்கவேண்டி ஏற்படும் என்று ஈரான் அரசு எச்சரித்துள்ளது. (எ)

### சோவியத் சீன உறவு

சோவியத் யூனியனுடன் உச்சிமாநாடு நடத்துவதற்குக் காலம் இன்னும் கனிவில்லை என்று சீனா அறிவித்து இருக்கிறது

## மகன் விட்ட தவறு நாஸரின்பெயரைப் பாதிக்காது

கெய்ரோ, பெப் 29

மகன் மீது சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாதக் குற்றச்சாட்டு, தந்தையாரான முன்னாள் ஜனாதிபதி நாஸரின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தாது.

எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் முன்கடைவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதக் குற்றங்கள் சுமத்தப்பட்ட 20 எதிரிகளில் ஒருவராக நாஸரின் மகனான 38 வயது பொறியியலாளர் காலித் நாஸரும் இருக்கின்றார்

காலித் நாஸர் யூகோஸ்லேவியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

ஆனால் அவர் மீதான வழக்கு விசாரணை அவர் இன்றியே கெய்ரோவில் நடைபெற உள்ளது

இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் ஜனாதிபதி முபாரக் சொன்னதாவது;

1952 இல் மன்னர் பாரூக்கைக் கவிழ்த்த புரட்சியை நடத்திய நாஸரின் மகனும் குற்றஞ் சாட்டியிருக்கின்றார் என்பது எனக்கு வருத்தத்தைத் தருகின்றது. சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களே- என்று அவர் சொன்னார். (எ)

### லீப் வருட பிறந்த தினம்

புதுடில்லி, பெப் 29

இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் திங்களன்று 92 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையே திரு மொரார்ஜிதேசாய் பிறந்ததினத்தைக் கொண்டாடமுடியும் காரணம் திரு. தேசாய் லீப் வருடத்தில் பிறந்தவர். (எ)

நிக்கரகுவா:

## மனிதாபிமான உதவி கிளர்ச்சிக்காரருக்கு வழங்கப்படும்

### அதிபர் றேகன் அறிவிப்பு

வாஷிங்டன், பெப் 29

நிக்கரகுவா கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவும் திட்டத்தை அங்கீகரிக்குமபடி அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அதிபர் றேகன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கிளர்ச்சிக்காரர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வழங்கும் திட்டம் இது — இப்படி அதிபர் றேகன் தனது வாராந்தர செய்தியாளர் மாநாட்டில் சொன்னார்.

அதிபரின் திட்டத்தை ஏற்பதா, இல்லையா என்பது பற்றி அமெரிக்கக் காங்கிரஸ் அடுத்த வாரம் வாக்களிக்க இருக்கின்றது (எ)

80ஆவது திருமணம்

## காதலும் கல்யாணமும் கடவுளின் கைகளில் தான்

### 84 வயது மணமகன் சொல்கிறார்

கோலாலம்பூர், பெப்29

மலேசியாவைச் சேர்ந்த 84 வயதான மந்திரவாதியான டாக்டர் ஒருவர், 80 ஆவது முறையாகத் திருமணஞ் செய்து கொண்டார்.

மணப் பெண்ணின் வயது 39 பெயர் புவான் மரியம்.

மணமகனின் பெயர் பக் அவாஸ் 'மலாய் மெயில்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "காதலும் கல்யாணமும் கடவுளின் கைகளில் தன் உள்ளது" என்று அவாஸ் சொன்னார்.

இதற்கு முன்னர் இவர் மலாய், சீன, இந்திய பாகிஸ்தான் பெண்களை மணம் முடித்திருந்தார்

பெரும்பாலான மனைவிகளை விவாகரத்துச் செய்து விட்டேன் சிலர் இறந்துவிட்டனர். இப்படி அவர் சொன்ன (எ)

எம். ஜி. ஆர். என்ற பல்கலைக்கழகத்தில் 40 ஆண்டுகள் பயின்றவள் நான்

# என்னை ஆட்டிப்படைக்க எவராலும் முடியாது

## மதுரைக் கூட்டத்தில் ஜானகி பேச்சு

— சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந வித்தியாதரன்—

மதுரை, பெப். 29

எம் ஜி ஆர் என்ற பல்கலைக்கழகத்தில் 40 ஆண்டு காலம் பயின்றவள் நான். என்னை ஆட்டிப்படைக்க எவராலும் முடியாது

ஜானகி இராமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் நடந்த அ. தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ஜானகி இராமச்சந்திரன் இரவு 11-50 மணிக்கு தனது பேச்சைத் தொடங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

நான் அரசியலில் ஏன் இறங்கினேன் என்று சொல்லட்டுமா? என் கணவர் புரட்சித்தலைவர் மறைந்த இரண்டு மூன்று நாட்களிலேயே கட்சி நிலை என்னஆனது என்று உங்களுக்குத் தெரியுமே

புரட்சித்தலைவர் அமெரிக்காவில் இருந்தபோது உடல் நலமின்றி திரும்பி வருவாரோ இல்லையோ என்று இருந்தபோது கோடிக்கணக்கான நீங்கள் வாக்களித்து ஆட்சியையும் அமைத்துக் கொடுத்தீர்கள்.

**தமிழகத்திலிருந்து**

தெரியும்.

அப்போது கட்சித் தொண்டர்கள், பிரமுகர்கள் அனைவரும் என்னை வீட்டில்சந்தித்து நீங்கள் தான் அடுத்து தலைமை வகிக்க வேண்டும். அப்போதுதான் புரட்சித் தலைவர் 15 வருடமாகக் கட்டிக்காத்து வந்த கட்சியை காப்பாற்றமுடியும் என்றார்கள்.

நானும் இரண்டு நாட்கள் யோசித்தேன். பின்னர் முடிவுக்கு வந்தேன்.

என் கணவருடைய நல்ல திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்ற கட்சி தலைமைப் [illegible] என்று தீர்மானித்தேன். [illegible] அதுதான் உங்களுக்குத்

5 ஆண்டுகாலம் முடியும் முன்னர் 3 ஆண்டுகளிலேயே புரட்சித்தலைவர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். மீதமுள்ள ஆண்டுகள் நாம் ஆட்சி செலுத்தாமல் இதனைக் கலைப்பது என்ன நியாயம்? இந்த ஆட்சியைக் கலைக்க காரணம் என்ன?

97 எம். எல் ஏ.க்கள் பெரும்பான்மையுடன் முதல் அமைச்சராக இருந்த 23 நாட்களில் ஆட்சியைக் கலைக்கும் அளவுக்கு நாங்கள் என்ன தவறு செய்தோம்

ஆட்சியைக் கலைக்க என்ன அவசியம் ஏற்பட்டது [illegible] நீங்கள் தான் இதற்குப் பதில் கூறவேண்டும்

சிலர் அமுலாக்க ராஜ்யம் நடத்துவதாக கூறுகிறார்கள். நாங்கள் உங்களைக் கேட்கிறோம்.

உங்கள்வீட்டில் யாராவது இறந்தல் அழமாட்டீர்களா? அவர் எனது கணவர். அவருக்காக அவர் மறைந்தபோது கோடிக் கணக்கானநீங்கள் அழுதீர்கள். நான் அழக்கூடாதா?

[இதைச் சொன்னதுமே துயரம் தாங்க முடியாமல் திருமதி ஜானகி முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதார். இரண்டு கைகளாலும் கண்களைத் துடைத்துக் கொண்டார்.]

முன்னாள் அமைச்சர்கள் ஆர். எம் வீரப்பன் ப. உ. சண்முகம் ஆகியோர் சேர்ந்து என்னை "பொம்மை" யாக வைத்து ஆட்சி நடத்துவதாகக் கூறினார்கள்.

நான் ஒன்றே ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம். ஜி ஆர். என்ற பல்கலைக் கழகத்தில் நான் 40 ஆண்டு காலம் படித்திருக்கிறேன்.

அதனால் அவரது கொள்கைகள், எண்ணங்கள், செய்கைகள் அனைத்தும் எனக்குத் தெரியும். எனவே என்னை யாரும் ஆட்டிப்படைக்க முடியாது

எனக்குப் பேசத் தெரியுமா? என்று கேட்கிறார்கள்.

உண்மைதான். எனக்கு அதிகம் பேசத்தெரியாது

பேச வேண்டியதைப் பேசுவேன். நியாயத்தைத்தான் பேசுவேன்.

இவ்வாறு ஜானகி இராமச்சந்திரன் பேசினார்.

(இ-உ)

## இலங்கை இராணுவம் பெரிய அளவில் புனரமைக்கப்படும்

கொழும்பு,மார்ச் 1

இலங்கை இராணுவம் பெரிய அளவில் புனரமைக்கப்படவிருக்கின்றது.

இதுசம்பந்தமான யோசனைகள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்தவுடன் உத்தேச மாற்றங்கள் ஆயுதபடையில் இடம் பெறும்

இராணுவத்தில் சுமார் முப்பதினாயிரம்பேர் உள்ளனர்

இரண்டு பிரிவுகளாக இராணுவம் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் உள்ள தளபதி மேஜர் ஜெனரல் அந்தஸ்தில் இருப்பார்.

ஒவ்வொரு மேஜர் ஜெனரலின் கீழும் மூன்று முதல் ஆறு படை அணிகள் இருக்கும்.

இவற்றுக்கு ஒவ்வொரு பிரிகேடியர் பொறுப்பாக இருப்பார். (இ எ)

கிளிநொச்சியில்

## மக்களுக்கு இடையூறு இல்லாது பார்க்கப்படும்

### பிரிகேடியர் உறுதி

எந்த வகையிலும் கிளிநொச்சி மக்களுக்கு இடைஞ்சல். இடையூறு ஏற்படாதவாறு கிளிநொச்சியில் சுமுக நிலை ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு கிளிநொச்சியைப் பொறுப்பேற்றுள்ள மதுரை ஏழாவது பிரிவு (செவின் மற்றும் குறா.) பிரிகேடியர் திரு யஸ்பார்சிங் கம்பைச் சந்தித்த கிளிநொச்சி பிரஜைகள் குழுவினரிடம் தெரிவித்தார்

அவர் மேலும் பின்வருமாறு கூறியதாக அறியப்படுகிறது:-

கிளிநொச்சி மாவட்டப் பூரண பாதுகாப்பில் உள்ளது. இங்கு விரும்பத்தகாத செயல்கள் இடம்பெறுமிடத்து அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இம்மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். இங்கு விவசாயிகளின் நன்மை கருதி மன்னிப்பு அடிப்படையில் ஒருமணி நேரம் ஊரடங்கு வேளையில் மக்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்றார்

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட மக்களுக்குள்ள பல இடைஞ்சல்கள் பற்றியும் புளியங்குளத்தில் பிரயாணிகள் படும் இன்னல்கள் பற்றியும் கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் விரிவாக எடுத்துரைத்ததாகத் தெரியவந்தது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




அண்ணா
தொழிலகம்
இணுவில்.



# உதயன்

01 - 03 - 1988 செவ்வாய்க்கிழமை



பாடசாலைப் பிள்ளைகளுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் வாங்கும் அண்ணா ரோபி லேபிள்களை சேர்த்துக் கொடுத்து மேலும் பல பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பூனைக்குட்டி லேபிள்
நேரசூரி
அண்ணா தொழிலகம்
இணுவில்.


## தமிழ் இளைஞர்கள் 15பேர் கொழும்பில் கைது

கொழும்பு மார்ச் 1 தேசியப் புலனாய்வுப் பிரிவு கொழும்பில் கடந்த சனி கிழமை பதினைந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்தது.

நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, பொஸ்வல் பிளேஸ் ஆகியஇடங்களை மூன்று மணித்தியாலங்கள் பொலிஸார் முற்றுகையிட்டுத் தேடுதலை நடத்தினர்.

அதிகாலை நடந்த தேடுதலின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மானிப்பாய், கொடிகாமம், யாழ்நகர், ஆனைக்கோட்டை, இணுவில், நல்லூர் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இந்த இளைஞர்கள் என்று கூறப்படுகின்றது. (ஒ-எ)

## 105 வயது மூதாட்டி காலமானார்

105 வயதுவரை உயிர் வாழ்ந்த மூதாட்டி ஒருவர் நேற்றுக் காலமானார்.

இவர் 1883 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி நெடுந்தீவில் பிறந்தார். (இ-51)

## ஆசையுடன் கொடுத்த கச்சான் அல்வாவை மகன் வாங்க மறுத்தான்

### தந்தை தற்கொலை!

யாழ்ப்பாணம், மார்ச் 1 ஆசையுடன் கொடுத்த கச்சான் அல்வாவை மகன் வாங்க மறுத்ததால் தந்தை தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் நல்லூர்ப் பகுதியில் நடைபெற்றது.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ். பதில் நீதிவான் க. கேசவன் நடத்தினார்.

கோவிந்தபிள்ளை - சிவராசா (வயது 30) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பாக இவரது மனைவி சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது:-

காலஞ் சென்றவர் மது அருந்தும் பழக்கம் உடையவர். என்னுடன் தினமும் சண்டை பிடிப்பதும் பின்னர் இணைவதுமாக இருந்தார்.

கடந்த ஒரு கிழமையாக காலஞ் சென்றவர் என்னைப் பிரிந்துவாழ்ந்தார்

25 ஆம் திகதி காலை 11 30 மணி அளவில் எனது வீட்டுப்படலை முன் நின்று என்னை அழைத்தார்.

நான் அவரிடம் செல்லவில்லை.

பின்னர் எனது பிள்ளையை அழைத்து கச்சான் அல்வா ஒன்றைக் கொடுத்தார்.

பிள்ளை வாங்க மறுத்து விட்டது பின்பு காலஞ் சென்றவர் வீட்டுப்படலை முன் நின்றுஅழுதுவிட்டுச் செல்வதைக் கண்டேன்.

சிறிது நேரத்தில் அயலவர்கள் ஓடிவந்து எனது கணவர் கிருமிநாசினி அருந்தி விட்டார் என்று கூறினார்கள்.

நான் ஓடிச்சென்று பார்த்த பொழுது தான் சாகப் போவதாகவும் தன்னை ஓரிடமும் கொண்டு போக வேண்டாம் என்றும் அவர் சொன்னார்.

பின்னர் அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் மரணமானார்.

இவ்வாறு அவர் கூறினார்

தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் கையளிக்கப்பட்டது. (இ-10)

## கால் ஊனமுற்றவர்கள் சக்கர நாற்காலிக்கு அரச அதிபருக்கு விண்ணப்பிக்கலாம்

கால் ஊனமுற்றவர்கள் சக்கர நாற்காலிகளைப் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. கால்கள் ஊனமுற்றவர்கள் யாழ். அரச அதிபருக்கு விண்ணப்பித்து சக்கர நாற்காலிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

சக்கர நாற்காலியைப் பெற்றுக்கொள்ளவிரும்புவோர் தங்கள் பெயர், விலாசம், வயது ஆகிய விவரங்களுடன் தமக்கு விண்ணப்பிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

விண்ணப்பம் அனுப்புவோர் தபால் உறையில் 'சக்கர நாற்காலிகளுக்கு விண்ணப்பம்' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்நாற்காலிகள் 'போறாட்' நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ஒ)

## சாம்பல்தீவில் கிரனேட் தாக்குதலில் ஒருவர் பலி!

கொழும்பு,மார்ச் 1 சாம்பல்தீவில் உள்ள ஹோட்டல் ஒன்றைப் பராமரித்து வந்தவர் கிரனேட் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இனந்தெரியாதவர்கள் இத்தாக்குதலை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

இச் சம்பவத்தில் ஒரு வேலைக்காரப் பெண் படுகாயமடைந்தார்.

உயிரிழந்தவரின்பெயர் ஏ. சச்சிதானந்தம் வயது 56.

படுகாயமடைந்த ராக்கம்மா என்ற பெண் சாட்சியமளிக்கமுடியாத நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்தவரின் மரண விசாரணை வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-எ)

## திருக்குறளை பாடநூலாக்க கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 1 திருக்குறள் வட இந்தியாவில் பாடநூலாக்கப் படவேண்டும்.

தமிழக நீதிபதி திரு. எஸ். மோகன் இதனைத் தெரிவித்தார்.

புதுடில்லியில் தேசிய ஒருமைப்பாட்டுக் கழகக் கூட்டத்தில் நீதிபதி திரு. எஸ் மோகன் கலந்துகொண்டுபேசினார்

திருக்குறள் 13 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது உலக ஒருமைப்பாட்டு உணர்வை திருக்குறள் வலியுறுத்துகின்றது.

இப்படி திரு மோகன் மேலும் கூறினார் (இ-எ)

## சோவியத் நிலை

மாஸ்கோ.பெப்.29 ஆப்கான் அரசை, ஆப்கான் மக்களே தெரிவு செய்ய வேண்டும்

இப்படி சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

## அறிவித்தல்

**யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம், 1988.**

யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ந் திகதி மு. ப. 10 மணியளவில் (சனிக்கிழமை) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

சி. கிருஷ்ணபிள்ளை.
செயலாளர்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கரவெட்டி.
25 . 2 . 1988


## DIPLOMA IN NURSING
## தாதிப் பயிற்சி நெறி

**15 - 03 - 1988 இல்**
புதிய வகுப்புகள் ஆரம்பம்

1. Nurses-Aid Association of Sri Lanka வினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்
2. எமது நிறுவனத்தில் தாதிப் பயிற்சியை முடித்துக் கொள்ளும் மாணவிகளுக்கு சிங்கப்பூர் வைத்தியசாலைகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
3. தூர இட மாணவிகளுக்குப் பாதுகாப்பான விடுதி வசதிகள் உண்டு.

விவரங்களுக்கு:

**சாயி**
**மெடிக்கல் அக்கடமி**
இல.10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர். (1771)


## நீத்தார் பத்திரம்

திருமதி
**இராசமணி செல்லையா**

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசமணி செல்லையா அவர்கள் 29-02-1988 அன்று காலமானார். இவர் காலம் சென்ற கோவிந்தர் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், திரு. அமிர்தலிங்கம் (Ret. Principal), திரு. அபிமன்னராஜா (Switzerland), திருமதி லீலாவதி, திருமதி சத்தியபாமா (Germany) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியபாமா (Switzerland) விஜயரட்ணம் (Ret. O. I. C.), புவனேந்திரா (Germany) ஆகியோரின் அன்பு மாமியாரும், சகிலா, சந்தன், சாமினி சுகந்தி, சத்தியராஜ் (Switzerland), விவியன் (சித்த மருத்துவ துறை, கைதடி) விஜித்தா (யாழ் தொழில் நுட்பக் கல்லூரி), விஜேந்தினி(மானிப்பாய் மகளிர் கல்லூரி) பிறவின், பிறவீனா (Germany) ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று செவ்வாய்க்கிழமை 1 மணி அளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ. அமிர்தலிங்கம்
காலிங்காவிலடி, சண்டிலிப்பாய்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



நயினாதீவு
திரு. செல்லப்பா குற்றாலலிங்கம்பிள்ளை

தோற்றம்: 03-01-1930 மறைவு: 02-02-1988

02 - 02 - 88 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப முதல்வர் திரு. செல்லப்பா குற்றாலலிங்கம்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் மாசி மாதம் 20 ம் திகதி (01 - 03 - 88) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

2ஆம் வட்டாரம்
நயினாதீவு.

## புலிகள் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாயிற்று-

ஆகவே கிழக்கு மாகாணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினர், கிழக்கு மாகாணத்திலுள்ள தங்கள் அக்கறையை கைவிடுவார்கள் என்றோ அதற்கு சம்மதித்துப் பேச்சுவார்த்தை எதிலும் ஈடுபடுவார்கள் என்றோ என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை-

இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-10)

## குடாநாட்- -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ந்துவதைத் தவிர்த்தல்.

★ குளங்களில் குளிக்காதிருத்தல்.

★ சமைக்க முன்பும், உணவருந்தமுன்பும், மலகூடம் போன பின்பும் சவர்க்காரம் போட்டுக் கைகழுவுதல், தனிநபர் சுகாதாரம் பேணுதல்.

★ நோய் கண்டவுடன் அண்மையிலுள்ள வைத்தியசாலைக்கு நோயாளியைக்கொண்டு செல்லுதல் வேண்டும்.

மேலும் விவரம் அறிய, சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நலச் சேவையாளர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (ஒ-18)

## பிஷப் டுட்டு கைதாகி விடுதலை

கேப்டவுன், மார்ச் 1 தென் ஆபிரிக்காவில் ஆர்ச் பிஷப் டெஸ்மண்ட் டுட்டு நேற்று திங்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சில மணி நேரத்தில் விடுதலைசெய்யப்பட்டார்.

நிறவெறிக்கு எதிரான 17 அமைப்புக்கள் மீது தென் ஆபிரிக்க அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்து பிஷப் டுட்டு தலைமையில் கிறிஸ்தவ மதகுருமார்கள் ஊர்வலமாக நாடாளுமன்றத்தை நோக்கிச் சென்றபோது பொலிஸார் தடுத்தனர்.

பின்னர் அனைவரையும் கைதுசெய்து ஜீப்பில் ஏற்றிச் சென்றனர். சில மணித்தியாலங்களில் பிஷப் டுட்டு விடுவிக்கப்பட்டார். (ர-எ)

## அன்னை --

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி முடிவு செய்திருந்து. நேற் அதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தது.

மேலும், மட்டுநகர் அன்னையர் முன்னணியினர் முன்வைத்துள்ள கோரிக்கைகளை வலியுறுத்திஉடன்நடவடிக்கை எடுக்கக் கோரும் மகஜர் ஒன்றையும் யாழ் அன்னையர் முன்னணி நேற்றுக் காலை அமைதிப் படையின் யாழ். நகரப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் காலோனிடம் சமர்ப்பித்திருந்தது

அவ்வேளை, இவ்விடயத்தை உயர் அதிகாரிகளின் கவனத்திற்குச் சமர்ப்பிப்பதாக பிரிகேடியர் அன்னையர் முன்னணி பிரதிநிதிகளிடம் தெரிவித்திருந்தனர். (அ-9)


## பிரயாண ஒழுங்குகள்

### 1. KUWAIT:

1. CLEANERS — 100
2. WAITERS — 30
   (மூன்று வருட அனுபவச் சான்றிதழ்)
8. HOUSE DRIVER
   சாப்பாடும் தங்குமிடவசதியும் இலவசம்

### 2. SAUDI AIRPORT CLEANERS:-

1. CLEANERS வயது 21 -- 44 வரை
2. DRIVERS Open Visa 30 — வயது 25 — 47
   சாப்பாடும் தங்குமிட வசதியும் இலவசம்

### 3. SAUDI ARABIA:

(1) CLEANERS
(2) OFFICE BOY — 1
(3) DRIVERS
(4) LABOURERS
(5) AG. LABOURERS — (கமத்தொழில் அனுபவம்)
(6) MASON
(7) CARPENTERS (
(8) PLUMBERS ( வயது 21 — 49
(9) ELECTRICIANS ( சாப்பாடும் -
(10) SECURITY ( தங்குமிடவசதியும் இலவசம்
(11) MECHANICS (

மு. கு: மேற்கண்ட தொழில் வாய்ப்பின் விபரமறிய எமது ஸ்தாபனத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

★ T. V. TRAVELS ★
Brown Road, Kokuvil.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01 03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd 292/2 Navalar Road Jaffna on Tuesday, 1st March 1988.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org